# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திருமதி.ஷர்மிளா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **கனிமொழி** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**11.09.2025 OS.47–2023 வா.சா.1 ஆஜர்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து பின்பு அதில் நான் கையொப்பம் செய்தேன். பிரமான வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

கடந்த 20.10.2015ம் தேதியிட்ட மைனர் வீரமாகாளியின் பிறப்பு சான்று நகல் தாக்கல் செய்கிறேன். **<u>மேற்படி பிறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்புமை செய்து வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** வம்சாவழி பட்டியல் அசல் தாக்கல் செய்கிறேன். **<u>மேற்படி வம்சாவழி பட்டியல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** கடந்த 08.10.2022ம் தேதியிட்ட வாதியால் 3,4 பிரதிவாதிகள் உள்ளிட்ட வீரமுருகன், தனலெட்சுமி ஆகியோர்களுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் தாக்கல் செய்கிறேன். **<u>மேற்படி சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை 3,4 பிரதிவாதிகள் உள்பட வீரமுருகன், தனலெட்சுமி ஆகியோர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை தாக்கல் செய்கிறேன். **<u>மேற்படி அஞ்சலக ஒப்புதல் அட்டை(எண்ணிக்கை–4) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**. கடந்த 20.10.2022ம் தேதியிட்ட வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அசல் தாக்கல் செய்கிறேன். **<u>மேற்படி வழக்கறிஞர் பதில் அறிவிப்பு வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** இந்த நம்பர் வாதியின் பாதுகாவலரும் தாயாரும் ஆன என்னால் இறந்து போன வெற்றிபாண்டியனுக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு கொடுத்த மனுவிற்கு 2ம் பிரதிவாதியால் மேற்படி மனுவை நிராகரித்து வழங்கப்பட்ட குறிப்பாணை பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **<u>மேற்படி குறிப்பாணை வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** வாதியின் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். **<u>மேற்படி ஆதார் அட்டை அசலுடன் ஒப்புமை செய்து வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**. வாதிகளுக்கு ஆதரவாக பிராது படி தீர்ப்பு செய்ய பிரார்த்திக்கிறேன்.

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இறந்து போன வெற்றிபாண்டியனுக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வெற்றிப்பாண்டியனுக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் சரண்யா, 2ம் மனைவியின் பெயர் கனிமொழி என்றால் சரிதான். எனக்கும் வெற்றிபாண்டியனுக்கும் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் கடந்த 28.07.2013ம் தேதி திருமணம் நடைபெற்றது. எங்கே திருமணம் நடைபெற்றது என்றால்

திருவேடகத்தில் உள்ள சிவன் கோவிலில் திருமணம் நடைபெற்றது. மேற்படி திருமணம் நடைபெற்றதற்கான ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. வெற்றிப்பாண்டியனுக்கும் அவரது முதல் மனைவி சரண்யாவுக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வெற்றிப்பாண்டியனுக்கு 2 மனைவிகள் இருப்பதால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக் கொள்ள 2ம் பிரதிவாதியால் குறிப்பாணை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி ராஜாமணி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு மாமனார் ஆவார். மேற்படி வெற்றிபாண்டியனுக்கு 3ம் பிரதிவாதி ராஜாமணி வாரிசாக மாட்டார் என்றால் சரியல்ல. பிராது படி எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam